சிவமயம்.

காஞ்சீபுரம்.

ஏகாம்பரநாதர்

தைவீகவுலா.

இரட்டைப்புலவர்களருளிச்செய்தது.

இஃது.

ஷ-யூர், சண்முகதேசிகர்குமாரர்

அருணாசலதேசிகர்

முன்னிலையிற்பரிசோதித்து

ம-ள-ள-ஸ்ரீ கொன்றைமாநகரம்

முருகப்பமுதலியார்குமாரர்

அருணாசலமுதலியாரவர்களால்

தமதுதேசாபிமானிஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவ௵ சித்திரை௴

இதன்விலை-ரூ-௩.

உ

சிவமயம்.

தைவிகவுலாவென்பதற்குக் காரணம்.

மஹாகவிகளாகிய இரட்டைப்புலவர்கள் இதைப் பாடி இராஜாதிராஜனாகியபல்லவமஹாராஜன்முன்னிலையிலே திருவேகம்பமுடையார்சந்நிதானத்து அரங்கேற்றத் தொடங்குகையில் காப்பாகச் சொல்லியநேரிசைவெண்பாவில் ஆயிரக்கால்மண்டபமென்றும்விகடசக்ரவிநாயகனென்றும்படிக்க அதைக்கேட்ட அச்சபையிலிருந்தவர்கள் ஆயிரக்கால்மண்டபமும்விகடசக்ரவிநாயகரும்இங்கில்லையே எப்படிசொன்னீர்களென்றுகேட்டார்கள். அதற்கவர்கள் நாமும்அறியோம்அவளும்பொய்சொல்லாளென்றார்கள் அதற்கவர்கள் மண்டபத்தையும் விநாயகனையும்கண்டபின்பு அரங்கேற்றுவோமென்றுபோயினார்கள் பின்பு இரட்டைப்புலவர்களும் தென்றேயம் போயினார்கள். சிலகாலத்திற்குப்பின்பு பல்லவமஹாராஜன் அவ்

வாலயத்திற்கு ஒருகோபுரங்கட்ட ஆரம்பித்துஅதை ச்சூழ்ந்த காடு மேடுகளைத் திருத்தும் போதுஆயிர க்கால்மண்டபத்தையும் அதனருகில் விகடசக்ரவிநா யகனையுங்கண்டு அப்ரபந்தத்தின் தைவீகத்தைஅறி ந்துஉடனே அவ்விரட்டைப்புலவர்களைத்தருவித்து, முன்னிலும் அதிக விசேஷமாய் அரங்கேற்றுவித் தார். அன்றுமுதலாய்த் தைவீகவுலாவென்று பெய ராயிற்று.

இவ்விருவரில் மூத்தவர்முடவர், இளையவர் குருடர் இவர்கள்பாடுகிறபாடலெல்லாம் ஒருவர்பாதியும் மற் றொருவர் பாதியுமாய்ப்பாடுதலால் இரட்டைப்புலவ ரென்று சொல்லபட்டார்கள். இவர்கள் சுத்த சைவசி த்தாந்தர்.

உலாவினிலக்கணம்.

இளமைப் பருவமுற்ற தலைமகனைக் குலங் குடிப் பிறப்பு மங்கலம் பரம்பரையிவற்று னின்றுனெண் பதுதோன்றத் தலைமையாய் மாதர்நெருங்கியவீதியி டத்தவன் பவனிவரப் பேதைமுதலிய வேழுபருவப் பெண்களுங் கண்டுதொழ உலாவந்ததாகநேரிசைக்க லிவெண்பாவாற்கூறுவது.

இதற்குச்சூத்திரம்.

இலக்கணவிளக்கப்பாட்டியல்

குழமகனைக்கலிவெண்பாக்கொண் - - (ந)
விழைதொல்குடிமுதல்விளங்கவுரைத்தா - ஙி
கிழைபுனைநல்லாரிவர்மணிமறுகி - - ணோ
மற்றவன்பவனிவரவேழ்பரு - - வ
முற்றமானூர்தொழப்போந்ததுலாவாம் - (க)
ஐந்துமுதலேழாண்டும்பேதை - உ
எட்டுமுதனான்காண்டும்பெதும்பை - - ஙு
ஆறிரண்டொன்றேயாகுமங்கை - - ச
பதினான்காதியத்தொன்யான்காறு - - ※
மெதிர்தருமடந்தைமேலேயாறுமரிவை - (ஞ)
ஆறுதலையிட்டவிருபதின்மேலோ - - - ※
ராறுந்தெரிவையெண்ணைந்துபேரிளம்பெணெ
ரேருரும்பருவத்தோர்க்குரைத்தனரே. - - கா

முற்றிற்று.

உ

கணபதி துணை,

காஞ்சீபுரம்.

ஏகாம்பரநாதருலா.

(காப்பு,)

நேரிசைவெண்பா.

சாற்றரியவாயிரக்கான்மண்டபத்தின்சார்வாக - *
வேற்றமுடனேயினிதிருந்து - - போற்றும்
விறல்விகடசக்ரவிநாயகனையேத்துந் - - *
திறல்விகடசக்ராயுதம் - - - *

(கலிவெண்பா.)

நிலம்போற்றும்பைந்துளபநீலப்பொருப்பும் [று
பொலம்போற்றும்போதிற்பொருப்பு நலம்போற்
மேருப்பொருப்பொருதன்வெள்ளிப்பொருப்பிரண்
டாரப்பொருப்புடையவன்னமுடன் - சேர
விருந்துமனமகிழ்வுற்றெப்போதுமின்பம் - *
பொருந்தியுறைகின்றபோதிற் - காந்தையினி
தேந்துமுடியோனுடனேயின்பநகையாடிவளைக் *
காந்தளிணைகொண்டுதிருக்கண்புதைப்ப - வாய்ந்த

படியும்விசும்பும்பரிதிமதிகாணு - - ※
தடையுமிடையிருளேயாகி - நெடிதாழிக்

காலஞ்சிறிதுபொழுதிற்கழிதலாற் - - ※
சிலமுனிவர்க்குந்தேவர்க்குஞ் - - சால

மறையவர்க்கும்வேதம்வகுத்ததொழிலெல்லாங் ※
குறைவுபட்டதென்றிறையுட்கொண்டு - செறியளக

வோதியமேநின்றுலகநெறிமுறைமை - ※
யாவுங்குறைவுபட்டதீங்கதற்கு - மேவியநல்

வேதாகமத்தில்விதித்தபெரும்பூசைதனைப் - ※
போதார்குழலாய்புரிகென்ன - வீதமக்கு

வாய்த்ததெனவிரும்பிவானோனைநஞ்சுண்டு - ※
காத்தபெருமான்கழலிறைஞ்சி - - யேத்தி

டமாதுபின்னைவழிபடுதற்கான - - ※
விடமாயதேதருள்செய்கென்ன - விடையோனுந்

தென்பாலதானதிசையிற்றிராவிச - - ※
நன்பாலித்தண்டகநன்னாட்டகத்து - முன்பாக

வோதுதிருநகரியோரேழினுஞ்சிறந்த - ※
வாதிநகர்காஞ்சியந்நகரிற் - - போதநல

மலிவளர்வதொருமாவடிதனிழற்கீழ்க் - ※
கன்னியெமையுனக்குக்காணலாஞ் - சொன்னபடி

(௰௭)

யாகமபூசைபுரியவினிதவ்விட்டத்துப் - ※
போகமெனவமரர்போற்றிசைப்ப - வேகிப்
பொருப்பனையனைவலொடுபோற்றுபல்கோடித் ※
திருத்தகுமாதருடன்சேர - விருப்புடனே
தென்றிசையிற்சென்றுதிருவாய்மலர்ந்தவுயர் ※
நன்றுதிகழ்காஞ்சிநகரெய்தி - வென்றியுய
மொன்றுகுறுமுயலுக்கோடுமிடம்பார்த்து [தோர்
நின்றுவிடுங்காஞ்சிநிழல்பார்த்துச் - சென்றடைந்
தாம்பிறனைக்காணலாந்தம்மையவர்காணுமை - ※
லாம்பரிசுநல்குமகம்பார்த்துக் - காம்பியான்றின்
மூன்றுமுலரிமுகிழ்க்குந்தடம்பார்த்துத் - ※
தோன்றுமலர்த்தீபச்சுடர்பார்த்துத் - தூன்ற
விடத்துநிழலேனுக்கியாவருங்காணப் - - ※
படுத்துமொருகிணறுபார்த்துக் - குடக்கோடிக்
சாலைவரிதாய்க்கரச்குநதிபார்த்தமரர் - ※
பேணுலகுதநுய்சகும்பிலம்பார்த்துக் - கீணரிய
செம்பொன்றநல்குஞ்சிலைபார்த்துத்திண்காரி ※
வெம்பரிபூர்சென்றவெளிபார்த்துக் - கொம்பிற்
கடிக்கமலப்போதுங்கழுநீருஞ்சேரப் - [தோர்
படைக்குமொருபாடல்மும்பார்த்து - நடுப்புகுந் ※
(உச)

தோற்றங்குரங்காக்குந்தொல்லையிடம்பார்த்ததனை *
மாற்றுங்கடவுண்மடுப்பார்த்துக் - கூற்று
இறவாவிடம்பார்த்திறந்தவர்பின்வந்து - *
பிறவாவிடம்பார்த்தபின்னர் - செறிதரங்கக்
கம்பைநதியின்கரையணுகிக்காண்டகைய [பிரான்
பைம்பொழில்சூழெம்மருங்கும்பார்த்தருளி-யெம்
யாமாதரவோடிருப்போமெனச்சொன்ன - *
தேமாவடிநிழலைச்சேர்ந்தருளிக் - கோமானை
நாமினிதுபூசிக்கநல்லவிடமீதென்று - *
பூமருவுதெய்வப்புனலாடித் - - தாமாகக்
கம்பைமணலைக்குவித்துக்கசிந்துள்ள - *
மெம்பெருமாட்டியினிதிறைஞ்சித் - தம்பழைய
சேடியர்களிற்பத்திருச்சூடகக்கையாற் - *
றேடவிழ்பூக்கொய்துதொடுத்தணிந்து - கூட
விரவுந்திருவுருவில்வெண்ணீறுநெஞ்சிற் - *
றிருவஞ்செழுத்துந்திகழ - - வுரிமையுட
னந்தமில்பூசையின்மேலாளுடையநாயகிக்குச் - *
சிந்தையொருப்படவேசெல்லுநா - ளிந்துநுத
லாகிக்குலமடந்தையன்புடைமைமுன்பேபோற் - *
றூதத்திருநிழலைச்சோதிப்ப - மோதிக்

(௯௪)

கனாபொருதுகம்பைநதிகற்பாந்தந்தன்னில் - *
விரிகடல்போற்றரங்கம்வீசி - யிருகடரும்
விண்ணும்பொலன்சக்ரவெற்புங்குலகிரியு - *
மண்ணும்புதையவரப்பண்ணி - யெண்ணிறந்த
வாரிடத்துமெய்விடத்துமெப்போதுமுள்ளபிரா *
னோரிடத்துத்தாமுமொளித்திருப்பப் - பாரிடமு
மேனையமர்நாடுமேகோதகமாக - - - - *
வானபெரும்பெருக்குக்கஞ்சாதே - வானவர்கோன்
செச்சைநிகருடம்பிற்செம்பாதியாகியதன் - - *
பச்சையுடம்பருமைபாராதே - - யிச்சையுடன்
றேசுதரும்பழையதிவ்யாகமப்படியே - *
பூசைதனையொழிந்துபோகாதே - - மாசிலா
வன்புடைமைதன்னையகன்றலரன்மேனி - - [ய
யென்படுமோவென்பதனையெண்ணியோ தன்பழை
பெண்மையோவன்போபிறப்போபெருங்காதற் - *
திண்மையோகற்போதெரிகிலோ - - முண்மை
மறைபடைத்தமேனிவளையான்முலையாற் - - *
குறிபடுத்திமார்புகுழைய - - நறைபடைத்த
தாழ்ந்தபுரிகுழலாடாஞ்சுகவம்மணன்மேல் - *
வீழ்ந்துதழுவவெளிப்பட்டோன் - சூழ்ந்தமரர்
(௪௪)

மீளாவடிமைவிலையாவணங்கொடுக்குந் - - ✻
தாளானரிபிரமர்தம்பிரா - - - - னூராய

தொல்லைத்திருக்குறிப்புத்தொண்டன்றலைமோதக - ✻
கல்விற்புறப்பட்டகையுடையோன் - வில்லால்

வசையின்முடிமேன்மதியாமன்மோத - ✻
விசையனெறிபொருதவீரன் - - பசியாற்

பதறியொருசிறுவன்பால்வேண்டப்பாலி - ✻
னுததிகொடுத்தவுதாரன் - - றுதிபெருகத்

தேவர்நெருங்குந்திருப்பங்குனித்திருநாண் - ✻
மேவியவேதவிழாவொலியின் - - மூவிக்

குலாவுபலபொற்கொடிவீதியெங்கு - - ✻
முலாவிவருநாளிலொருநா - ணிலாவியசீ

ரெவ்வானவருமிறைஞ்சும்பெரும்பூசை - ✻
திவ்யாகமப்படியேசெய்ததற்பின் - மைவானி

லாறுதொடவுயர்ந்தவாயிரக்கான்மண்டபத்தி - ✻
லேறியருளியினிதிருந்து - - சீறியெழக்

காணுந்தொறுமொருதன்கண்மூன்றினிமிரண்டு ✻
நாணுந்திருக்காப்புநாணணிந்து - சேணுலவு

மைவாரிமேகம்வளரும்பிறைபடைத்த - - ✻
செவ்வானமீதுநிகழ்ந்ததென - வெவ்வாயந்

(ருச)

தோடு[illegible]றனிற்பல்கோடிப் - ※
ப[illegible]ள - - நீடுமிரு
பா[illegible]பதுமராகக்கிரிமே - ※
ல[illegible]றைந்ததெனக் - கோலமுட
ல[illegible]ட்டணிந்ததிருச்சடைதனை ※
ய[illegible]ரணிதென்ன - வொண்முக
வெ[illegible]டயாளிரூபாகமுமெங்க - - ※
ரம்[illegible]மேலியா[illegible]கனத் - தம்மின்
முயங்க[illegible]ரிமான்முலைகுழைந்தமெய்யிற் - ※
றயங்கத்திருச்சாந்துசாத்தி - - யுயர்ந்த
நலைத்தண்டுழாய்மௌலிநாயகியில்வாழன்ன - ※
மெனைத்துமறியாவிடத்தே - தனைக்கமையச்
சம்புகுலத்தொருவன்சாத்துகைக்காமென்றளித்த ※
செம்பொன்மணிமகுடஞ்சேர்வித்துத் - தம்போ
லிகரற்றவரிருவர் நீங்காவிடத்தே - - ※
மகரக்குழைதயங்கவைத்துத் - - திகழுமரி
சாதலொழித்ததற்குச்சான்றிருக்குமவ்விடத்தே ※
சோதிமணிக்கட்டுவடஞ்சூழ்வித்துப் - போதப்
பதுமவனேர்தழும்புபட்டவிடத்தே - - ※
புதுவயிரக்கேயூரம்பூட்டித் - - திதழ

(காச

பரந்துவரர்கடவுட்பச்சைக்குரும்பை - *
யிரண்டுகுறியிட்டவிடத்தே - திருந்துமுடிக்
காணிப்பிறைநிலவோரங்காரசிப்புளமோ - *
வேணிப்புணாயிருபால்வீழ்ந்ததெனச் - சேணிற்
பனித்தாரகையின்பரிசன்னமுத்தின் - *
றனித்தாழ்வடம்விளங்கச்சாத்திக் - குனிப்பிற்
றிருந்துமபிநயமுந்தெய்வத்துடியு - *
மிருங்கனலும்வாழுமிடத்தே - பொருந்தப்
பிறந்தவிளம்பரிதிபோலழகுமட்கச் - - *
சிறந்தகடகஞ்செறித்து - - நறுங்கப்
பிசைந்துபிசைந்துண்ணவொருபிள்ளையறுத்தாக்க *
விசைந்துபசிதோன்றுமிடத்தே - விசும்பின்
முதிருமிருளைமுனிபற்மராகக் - - *
கதிருதரபந்தனமுங்கட்டி - - மதுரைப்
புரவிதிகழிடத்தேபொற்பஃமராகத் - - *
திருவுடையாடைதிருத்தி - - பரதவிதக்
குஞ்சிப்புநல்லநிலைக்கூத்துந்திகழிடத்தே - *
செஞ்சித்ரரத்னச்சிலம்பணிந்து - துஞ்சிச்
செலவுற்றவானோர்சிரந்தொடுக்குமாலை - *
யிலகிக்கிடக்குமிடத்தே - - குலவு
(எச)

மதுமிக்ககல்ஹாரமாலையுடனே - - - ※
யிதழித்திருமாலையிட்டு - மதில்பொருத
தம்பொற்சிலையைத்தலைக்கொண்டனனெனச் - ※
செம்பொற்றிருவாசிகைசேர்த்து - விம்ப
விரவியிடைதானிலங்குவதேயென்னப் - ※
பரவுமணிக்கண்ணாடிபார்த்துச் - சுருதியினுஞ்
மூவாதபேரன்பின்மூவர்முதலிகளுந் - ※
தேவாரஞ்செய்ததிருப்பாட்டும் - பாவனையாற்
போதவூர்கண்ணீர்ப்புளகத்துடனணிந்த - ※
வாதவூராளிதிருவாசகமுந் - - - தீதகல
வேட்டென்றெழுதாவிருபிறப்போர்கற்கத்தான் ※
பாட்டுண்டநாலுபழங்கவியுங் - கேட்டருளி
யைங்கைப்பவளநிறத்தானைப்பெருமானுஞ் - ※
செங்கைச்சுடர்வடிவேற்சேவகனு - - மெங்கு
நிறைபூதஞ்சூழநிலமெல்லாங்காப்ப - - ※
மறைஞாளம்பறிவருவானு - நிறையருளாற்
றுண்ணெனத்தேவர்க்குச்சுதைபகுர்ந்தமோகினியாம்
பெண்ணிடத்தில்வந்துபிறந்தோனும் - பண்ணுமக
மங்கும்படிக்கசுரற்கண்வாட்டுந்திலங்குர்தம்முடைய
திங்கணுதல்வேர்விற்செனித்தோனுந் - துங்கமுடி

(அச)

கொண்டகடவுட்குளிர்கொன்றைத்தாருமுடித் - ✽
துண்டப்பிரிகலத்திலுண்டோனுந் - தண்டமிழான்
மண்புகழப்பாடிமறையூரிலாண்டனையைப் - ✽
பெண்டனையாக்கியபிள்ளையுந் - தின்பிடித்துப்
பாழியமனைரிடும்பாரச்சிலையுடனே - ✽
யாழிதனின்மிதந்தவன்பனுஞ் - - சூழிருட்
பாதியிரவிற்பரவைக்குஞ்சங்கிலிக்குந் - ✽
தூதுநடப்பித்ததோழனுந் - - - தீதில்
வழக்கில்பெருந்துறையில்வாழ்வித்தகோலங் - ✽
கழுக்குன்றிற்சண்டகவியும் - வழுத்தினர்க்குப்
போதவினியதொருபொன்வண்ணத்தந்தாதி - ✽
யாதியுலாவோடமைத்தோனுஞ் - - சோதிமணி
மன்றினருகுமலர்த்துழாய்நாறுமிடங் - ✽
கொன்றைகமழ்வித்தகொற்றவனு - மென்றும்
புடைமருவுதன்னிழலிற்போகாதபேயை - ✽
யிடைமருதிலிட்டவிறையு - - மடையத்
துயர்கடந்ததொண்டத்தொகையதனிலேனைச் ✽
செயல்சிறந்ததொண்டத்திரளுங் - கயிலைதனிற்
றந்தாள்படாமற்றலையானடந்துபோ - ✽
யந்தாதியாற்புகழ்ந்தவம்மையு - - மிந்தநிலங்

(கூச)

கோட்டிவளைத்தெடுத்துக்கூட்டிக்குலைத்தடுக்கிக் *
காட்டவல்லபூதகணவரு - - மீட்டுநல
மெண்ணுமொருநாற்பத்தெண்ணாயிரவரொனும் *
புண்ணியவேடப்புனிதரு - - நண்ணரிய

வோராயிரத்துத்தொளாயிரவொன்றாழிமுதற் - *
பேராநிமந்தப்பெருமையருஞ் - - சேர
வரியவிதிமுறையோடுள்ளமுருகிப் - - *
பொருவரியவன்புடனேபோதச் - - - சுரரைத்

திருவாசலினந்திசெங்கைப்பிரம்பா - *
லிணையாகவெங்குநிறுத்தி - - வருவார்
கழற்சேவடிபணிந்துகண்களிப்பமுன்னே - *
யெழச்சேவியுநீங்கவென்ன - - முழுக்க

விருப்பதுவும்வெள்ளிமலையென்னுமற்செம்பொற் *
பொருப்பினுமேறினார்போல - விருப்பால்
வடித்தசுடர்வேற்சம்பன்வாழ்மல்லிநாதன் - *
கொடுத்ததிருத்தேர்மேற்கொண்டு - முடித்தநதி

யாடும்விசையிலலையெழுந்துதன்மீதி - *
னீடும்வகைசுழித்துநின்றதெனக் - - கூட
விருகதிரஞ்சவெறிக்குநிலாவி - - *
லொருதனிவெண்குடையோங்க - விருபாலும்

(௱௪)

கங்கைநதியிற்கரைபுரண்டசீகரம்போன் - ✻
மங்கையர்கள்வெண்சாமரையிரட்ட - வெங்களப
மிட்டாலோபூணுகவென் றுரகமாமெவயோற் - ✻
பட்டாலவட்டம்பணிமாற - - விட்ட
வெருதுமராமரமுமெய்வேழஞ்சாயப் - ✻
பொருதவிடைக்கொடிமுன்போத - வருவதொரு
மேருகிரிதொடரும்வெள்ளிக்கிரியென்ன - ✻
மூரிவிடையெம்பிரான்முன்போதப் - பேரிகை
சல்லிகைமத்தளிதண்ணுமைபண்ணமை - ✻
பல்லியமெங்கும்பரந்தார்ப்ப - வல்லபடி
வாணன்குடமுழாவாசிப்பமாமதுர - - ✻
வீணையுததிமிகவுயிர்ப்பப் - - பேணும்
பரிசிறமதுசெவிப்பாண்சேரிபெற்ற - - ✻
விருவரிசைபாடியேத்தச் - சுருதியெழு
மின்னரம்பேழிசைததும்பவெம்மருங்கும் ✻
கின்னரர்தங்கள்கிளைபாட - முன்னரிடும்
பேரிகையோசைபிறங்கமிகத்தாரையுடன் - ✻
மூரிவலம்புரிமுன்முழங்க - - வாரங்
குளிக்கவதியாரக்கொங்கைத்தழும்பும் - ✻
வளைத்தழும்பும்பெற்றபிரான்வந்தான்,கிளைத்தசடை

(௱௰௪)

ஏகாம்பரநாதன்வந்தானிகல்விடையின் - *
பாகாம்பழையபரன்வந்தான் - - மாகத்
தெழுமிரண்டுபேரொளியுமெய்போதுமஞ்சி - *
வழிவிலங்குமேருடையான்வந்தான் - சுழிகொண்
டலையும்பகீரதிநின்றார்க்கின்றசென்னி - *
மலையன்றிருமருகன்வந்தான் - கலைதேர்
பரிசிலிருவர்க்குப்பகல்விளக்குங்கண்ணும் - *
வரிசையுடனளித்தான்வந்தா - னொருவயிற்றில்
வாராவுடம்புடையான்வந்தானெனமறுகிற் - *
சீரார்திருச்சின்னஞ்சேவிப்ப - வேரிமிகத்
தேங்குமலரோன்சிறையோதிமமீது - *
மோங்குதிருமாலுவணத்துந் - தாங்குபடை
வாசவன்வெள்ளைமதவாரணமீது - *
மீசர்பதினொருவரோறிடத்துந் - தேசுதரு
மாதிருவரொவ்வேழடர்புரவித்தேர்மீதும் - *
வேதிருவரொண்மர்விமானத்துஞ் - சீறியடுங்
கூற்றுக்கடவுள்கொடியகடாமீதும் - *
போற்றுமளகேசன்புஷ்பகத்துங் - காற்றுறவாம்
வேகமிகுதழலோன்வெற்றித்தகர்மீதும் - *
வாசைவருணன்மகரத்து - மாகமத்தி
(௱௨௪)

னீதிதெரியுநிருதிநரவாகனத்துங் - - *
காதுபவனன்கலைமீதுஞ் - சோதிதிகழ்
சீதமதிமுச்சின்றேர்மீதுமோரேழு - - *
வேதமுனிவர்விமானத்தும் - போதவுயர்
விஞ்சையர்சாரணர்சித்தர்வியன்கருடர் - - *
செஞ்சுடிகைநாகருடன்சேவிப்ப - மஞ்சுகவித்
தாடுங்கொடிகளருக்கன்பரிதடுக்கு - *
மாடநெடியமணமறுகி - - னீடருளாற்
பொன்னனகூடகக்கைப்போதன்னமும்புனலு - *
மெந்நாளுமெவ்வுயிர்க்குமீந்தருளி - மன்னு
மறச்சாலைப்பெண்டிரருகுவரக்கங்கை - - *
புறக்காவற்பெண்டிருடன்போதச் - சிறக்கும்
வளையரமாதரும்வாராகரத்திற் - - - *
திருவுடன்வந்ததிரளுந் - திருவுங்
கலையையகலாதகன்னிமடமானு - - *
மலையையகலாமயிலுங் - - கலைமகளும்
பொன்னினுலகாளும்பூவையருமாநதிக - - *
ளென்னுமடவாரொழுவரு - - மன்னமயிலி
சீறும்விடைகளிறுசேனங்கடாயாளி - - - *
யேறுமடவாரொழுவருங் - - கூறுங்

(௱௩௪)

சூலநாகமாதர்சூழாமும்பணிந்து - - ※
பொலமாடவீதிபுகுத - - நிலமாதர்
தாணுநுதல்விழிமேற்றூவடிபோகத்திரண்ட - ※
டாளமலரோன்படையென்னப் - பூணரவஞ்
சூழ்ந்தரங்கச்சுரநதியிற்றோய்ந்துவிளை - ※
யாடும்படிதிரண்டவன்னமெனப் - பாடலினாற்
றம்பெருமைபாடுந்தமிழோன்றனக்களித்த - ※
வெம்பகலிற்சேர்ந்தவிரக்கென்ன - நம்பருறை
சூதத்தெழுந்ததுணர்ப்பல்லவப்படலங் - ※
கோதத்திரண்டகுயிலென்னத் - தீதற்ற
வெந்தைபெருமான்கரத்தினேந்துமிளமான்கண்டு
வந்துதிரண்டசிலமானென்னச் - செந்தமிழின்
பாட்டுக்குழல்வோன்பசும்பாதியின்வார்த்தை - ※
கேட்டுத்திரண்டகிளியென்னக் - கூட்டகிலார்
தாழ்ந்தசடைமுடியோன்றன்னுடம்பைபக்காவொன்று
வாழ்ந்துதிரண்டமயிலென்னச் - சூழ்ந்தரன்பா
னன்புதியதூதுக்குநான்செல்வேனுன்செல்வே - ※
னையனம்போலமெனகுழல்வண்டெங்குமெழ - நிரைபுயமே ※
லெங்கடமூம்பணிந்தாலென்செய்யுமென்பனபோற்
செங்கைவளைகள்சிறந்தார்ப்பச் - சங்கரன்மேற்

றள்ளவரியகுறித்தாமுமிடதாயங் - *
கொள்வனபோற்கொங்கைக்குவடசைய - வுள்ளமகிழ்
செம்பதுமைகேள்வன்றிருமலிநாதனுயர் - *
சம்புபதிநல்குந்தடந்தேர்போல் - கம்பரே
யித்தேருங்கண்டாலோவெஃபனபோலல்குலெனு *
மத்தேரின்மேகலைகளார்ப்பரிப்ப - வித்தெருவிற்
சீற்றவிடையோனைச்சேவிக்கப்பெற்றபதம் - *
போற்றுவபோற்பொன்னூபுரஞ்சிலம்ப - மேற்ககன
கூடம்வெளியடைத்தகோபுரத்துங்குன்றனைய - *
மாடநெடுமத்தவாரணத்து - மோடுகதிர்
விஞ்சுகொடிதடுக்குமேனிலாமுற்றத்து][ஞ்சமரிற்
மஞ்சுதவழ்கங்கைகொண்டான்மண்டபத்தும் - வெ
றத்துபரிபல்லவன்சம்புகுலப்பெருமான் - - *
வைத்ததுலாபாரமண்டபத்துஞ் - - சித்ரமணிச்
சூளிகையின்மீதுஞ்சுதைநிலாமுற்றத்து - *
மாளிகையின்மீதுமறுகிடத்தும் - - யாளி
செறிபுமணித்தெற்றியினுஞ்செய்குன்றிடத்து -- *
நிறையவெவருநெருங்க - - விறையவனை
வந்துவணங்கிமதிக்கொழுந்துஞ்செஞ்சடையுஞ் *
சிந்தைகவர்கண்மலருஞ்செவ்வாயு - மெந்தைபிரான்

(ாருச)

றெய்வப்புரிநூலுந்திண்டோளுமார்பகமுஞ் - ※
சைவத்திருவானதாழ்வடமு - - - மெய்வழியக்

கொண்டதிருநீறுங்குழைதுரந்தசெங்கழுநீர் - ※
மண்டுதிருக்கொன்றைமாலையு - மெண்டிசையுந்

தாவில்சுருதித்தமருகமுந்தம்முடைய - - ※
தேவியறியுந்திருக்கூத்தும் - - - யாவையுந்த

முள்ளத்தேகொள்ளாவுருகாப்பெருகின்ப - ※
வெள்ளத்தேவீழாமிகவுயிராத் - - தள்ளியுறை

விட்டவாள்போல்விழிபிரீமென்சுணங்கின்பொன்முலைமேம் ※
பட்டவாபாரீர்பசப்பென்பார் - கட்டழகன்

கோதையகன்மார்பங்குழைவிக்கமாட்டாதா - ※
லேதுபடிலெளிமையென்பார் - - - போத

நேருக்கியரிதிட்டநிணாவளைகளெல்லா - - ※
மிருக்கையரிதுகரத்தென்பார் - திருத்தன்

பரிக்குந்தழும்புபடுத்தாவளைக - - ※
ளிருக்கலென்போகிலெனென்பார் - திருக்கண்கள்

வையார்நம்மேலென்பார்வைப்பாரவர்கருணை - ※
மெய்யாவொருத்திமேலென்பா - ரையோ

வருள்படைக்கவேண்டியருமந்தகண்ட - ※
மிருள்படைத்ததெனிங்ஙனென்பா - ரிருள்படைத்த

(௱௧௰௪)

தின்றுகில்வானேனொனுஞ்சாதியத்தனையும் - *
பொன்றுதோவென்றுபுகலுவார் - வென்றிமத

னேவானோமேலென்பாரோவினோவின்னமுந்தான் - *
வேவானோபோய்ததோவிழியென்பார் - மேவனிலஞ்

செல்லாதோமீதென்பார்சென்றல்வரவிடுமோ - *
நல்லார்திருக்காப்புநாணென்பார் - புல்லந்

திருக்கொன்றைமாலைபெறிற்சிந்தைகுடியேறி - *
யிருக்கின்றமாலொழியுமென்பா - ரொருத்திகுறி

யிட்டதிவர்மார்புபிரசொய்துவதின்மாலுழன்று - *
பட்டதமையும்படவென்பார் - மட்டவிழு

மம்பதுமட்போதினயன்மாலறியாத - *
வும்பரறியாவொருகிரியைச் - செம்பவளப்

பாதியுடம்புபசப்பித்தாள்பைங்கரபக் - *
கோதைமுலையாற்குழைவித்தா - ளாதலா

லுண்மைதனக்கிந்தவுமையாள்பிறந்ததற்பின் - [க்
பெண்மைதனக்கேற்றம்பெற்றதென்பார் - பெண்மை

குறையாளிவளன்றோவென்பார்மற்றிங்ஙன் - *
மறுகிலெதிர்வந்தமாத - - - ராறுசமய

அண்டருக்குந்தாயாரறச்சாலையிப்படிபெற் - *
றுண்டிருக்குமேதாருடையானே - கொண்டவிருட்

(௱௭௪)

நாவிவிழியொருத்திகட்டிக்குறியிட்டு - ※
மாவடியில்வைத்தவயிரமே - தேவிமுகஞ்
செவ்விபெருகத்திருச்சூடகக்கையாற் - ※
றவ்விபிடித்துச்சமைத்தன்ன - மெய்யுயிர்க்கு
மாரச்சொரிதருநெலாட்டைக்கிருநாழி - ※
சேரப்படியளக்குஞ்சீமானே - மார்புபோற்
கண்ணுஞ்சிலர்படைக்ககாணியோகாமவேள் - ※
பண்ணுந்துயர்தீரப்பார்த்தருளீர் - வெண்ணிலவோ
டூருமிரங்கிதன்றனீராமமும்முடைய - ※
வாரம்பசிதணித்தாலாகாதோ - வாரவுளும்
வேவக்கறங்கும்விடைமணியையும்முடைய - ※
சேவுக்கினிதளித்தாற்றீதாமோ - மேவியவிக்
கொக்கினிறகுடனேகூவுங்குயிற்சிறகை - ※
யொக்கவணியவுமக்கொண்ணாதோ - - மிக்க
வறஞ்செய்புமுருடையீராகாதுகாணு - ※
மறஞ்செய்யவென்றுமயங்கா - திறந்திகழும்
விண்டகுவளைக்கும்விள்ளாததாமரைக்குந் - [யீர்
தண்டளமும்பொன்னுஞ்சாத்துவா.ரொண்டொடி
பாகம்பிரியாதபச்சைமயில்காணுமேல் - ※
ஏகம்பர்பார்த்தாரையென்பார் - ராகமதன்
(௱௮௪)

காதன்மலர்சொரிந்துகைசலிப்பவிவ்வண்ண - ※
மாதர்பலர்மயங்கமற்றொருத்தி - பேதை

குழாங்கள்

முற்றியது.

பேதை.

திரையுதவுமேரமுதின்சிற்றரும்புமுற்றி - - ※
வருமுகையதானதொருவல்லி - சுருதியளி
பூதமலராவொருதாமரைமுகிளங் - - ※
காதலுதவாதகாமசரம் - - வேதத்
துழையானகலாதுறைகின்றசூதங் - - ※
குழையாததென்றற்கொழுந்து - பழைதாகக்
கம்பருறையுங்கடவுளிளஞ்சூதத்தின் - ※
கொம்பிலுறையாக்குயிற்பிள்ளை - - யின்ப
வலையாரமுதத்தினாரம்பவித்து - ※
தொலையாதகாமத்தின்றோற்ற - முலகிற்
சிறந்தபிரானல்லாததேவர்களைப்போல - ※
விறந்துபிறக்குமெயிற்ரு - ணிறைந்துமைப்போன்
(௱௬௧)

முச்தாரம்பூணமுலையெனக்குச்சூட்டுமென்று - *
கைத்தாயர்முன்னின்றுகண்பிசைவாள் - சுத்த
வியல்புதனையொழியவேதும்பிறழாக் - - *
கயலையனையவிருகண்ணாள் - புயல்வரினு
மாடாதகோதைகையதன்பிஞ்சம்போற்கூடுவதுங் - *
கூடாதுமானகுழலினாள் - - - னீடிமிக
வோங்கிவளர்தன்னுரியபரிணாமமெல்லாந் - *
தாங்கியவித்தன்னதனத்தினாள் - - னீங்காத
வேகம்பமென்னீரிமவான்மகடழுவ - *
வாகங்குழைந்தவரனென்னீர் - மாகம்பை
யாறென்னீரம்மையறச்சாலையென்னீர்நம் - *
பேறென்னீரொன்றதனைப்பேசுவித்த-வாறெல்லாம்
பாவைக்குளாத்தந்தப்பாவைபகராதெல்லாம் - *
பூவைக்கழுதுபுகலுவாண் - - மேவுபல
தீவிற்பிறந்தசெழுமணியுந்தம்மூரின் - *
வாவிபிறந்தமணிமுத்துங் - - காவிவிழி
யம்பைமுதனூலரனைப்பூசித்த - - *
கம்பைமணலுங்கலந்தெடுத்துக் - கொம்பனையா
ளொண்டொடிமாதருடனேகரஞ்சிவப்ப - *
வண்டலிழைத்துமகிழ்போதிற் - பண்டொருநா
(உாக)

டென்றிடையிற்பெற்றதிருவமுதச்செய்வாயும் - ※
பண்டிகிராற்கொண்டபரிகலமு - மண்டுமெரி

தாழ்ந்தினக்குழவைதான்கொடுத்தவுட்சாத்தும் ※
வேழங்கொடுத்ததொருமேற்சாத்துஞ் - சூழ்பனியி

னோர்கல்கொடுந்தவொருபாகமுமுடையார் - ※
தாவகுமணிமறுகுசாருதலு - மாங்கவளும்

வண்டரிணையொழிந்துவர்க்குறுகிச்செந்துவர்வா - ※
யொண்டொடிமாதருடனிறைஞ்சி - யண்டருறை

நாகஞ்சிலையாகநண்ணார்புரமெரித்த - ※
ஏகம்பர்தம்பெருமையென்னோதே - கோகநக

வுந்திக்கணையோனொருபாகமுஞ்சடையு - - ※
மர்தப்புரமென்றறபதே - - யிந்தப்

பொருந்தமணக்கோலப்பிள்ளையுடன்றேர்மே - ※
லிருந்துமனைக்கொடுபோயென்னொருத்தியிவர்

பூணத்தவிருவர்பொன்முடியுஞ்சேவடியுங் - ※
காணக்கிடையாதகம்பர்கான் - வாளுதலாய்

பாயவுலகம்பதினாலுமம்பரந்தான் - ※
ஆயபெருமானருகிருக்கத் - - தேர்யுமகிழ்

பச்சைசக்கிரியாற்படவரத்திருமார்பி - - ※
லச்சிட்டவர்க்கொழிந்துண்டாகுமோ - வச்சமுடன்

(௨௱௰௬)

யீடெடுத்தகம்பைமிகுபெருக்குக்கஞ்சாத - *
மாதவத்தாட்கன்றியிதுவாட்குமோ - மூதண்ட
மெல்லாம்பெறநெல்லிருநாழியால்வளர்க்க் - *
வல்லாடனக்கன்றிவாய்க்குமோ - சொல்லாய்

குறையின்மடமயிலேகூசாதேயாமே - - *
யுறைவருகேறியிருப்போ - - - மறவிதனை

யென்னவிளையாளிருண்ணமுத்தரும்ப - *
வன்னையர்தங்கையாலணைத்தாற்றி - யின்னேபோ

தென்றுபகர்வதன்முனேகம்பர்தேருடனே - *
தென்றலந்தேருந்தெரிவித்து - - வென்றி

மதன்கைவரிசாபம்வாங்காமல்வாசம் - - *
பொதிர்த்தகணைபூட்டாமற்போந்தான் - பெதும்பை

பெதும்பை.

யிவண்மற்றொருத்தியெவர்க்குந்தெரியாப் - *
பவளத்தமுததருட்பாவை - - - தவளத்

திருப்பாற்கடற்பிறந்துசேர்தாமரைமே - - *
லிருப்பார்க்குநேரிளையாள் - விருப்புடனே
(உ௱௯௧)

யார்க்குமளிகரவிழ்பதமீதென்று - - - ✳
பார்க்குமுகைபோலும்பருவத்தா - ளாக்கமுடன்
போராக்குமாமதனன்போதும்பவனிக்குத் - ✳
தேராக்கவெண்ணுஞ்செழுந்தென்றல் - வேரிநறும்
போதுபுனைவதற்கும்பூணாம்பூண்பதற்கு - ✳
மாதரவுவைக்குமளவினு - - - ளாதிமதன்
பேருமடநாணும்பெண்மைப்பெருமிதமும் - ✳
வீறுஞ்சிறிதரும்புமெய்யினாள் - - சீறியெரி
பூட்டமதின்மூன்றுழிநிகழ்ந்தவண்ணம்போற் - ✳
கூட்டிமுடிக்குங்குழலினாள் - வேட்டவர்தம்
புந்திகவர்வஞ்சனையும்பொய்யுங்கொலையுமிடம் - ✳
வந்துவந்துபார்க்குமதர்விழியாள் - மைந்த
ருகமையழகோடேயுள்ளரும்புஞ்சஞ்ச - - ✳
முகையிலமுகைபோலுமுலையா - ளிகுளையர்தம்
மீளாதகாதல்விழைவுணர்க்கும்போததனைக் - ✳
கேளாதவர்போலக்கேட்டிருப்பாள் - கேளாய
மாதருமானுமயிலும்பசுங்கிளியு - - ✳
மோதிமமுஞ்சூழவுடன்போத - மாதவிப்பூம்
பந்தரிட்டநீழற்பளிக்குச்சிலாதனத்து - - ✳
வந்திருப்பவெற்றிமடமாத - - ருந்திக்

(உஉகூ)

குவளைமலரிருகண் (*கொங்கைக்குறி)யிட்ட - *
பவளமலையிணையும்பாடித் - - தவளநகை
யன்னையறஞ்செய்தவறச்சாலையும்பாடிக் - *
கன்னியின்றாடுகழங்கென்னக் - கன்னிதனக்
காழிதருமுத்தமாகாதென்றவ்வூரி - *
லேழுநதிமுத்தமினிதெடுத்துச் - சூழ்தேரிற்
றட்டுநிகரல்குற்சங்கிலியாற்றூதுதமை
விட்டவர்பாற்பெற்றவிழியொன்றும் - வட்டித்துப்
பாதமலர்துதித்தபட்டவாணன்றனக்குக் - *
காதலுடனளித்தகையிரண்டும் - - - பூதத்
திகலொழியநின்றுமிருந்துங்கிடந்து - *
முகிலுறையுந்தானங்கண்மூன்று - - நகிலா
லிலங்குவரிவளையாலிவ்விரண்டாய்த்தம்மே - *
னலங்கொடமூம்பொருநான்குந் - - துலங்க
வுமைக்கமைத்தகோற்கோயிலூழிமுதனு - *
ரமைத்தனகோணங்களைந்து - மமைத்தோ
ளிளைக்குமருங்குலிருநாழிநெற்கொண் - *
டளிக்குஞ்சமயங்களாறுங் - - குளிப்பார்
செறியும்பவக்கடலைச்சிந்தித்திளாயா - - *
லெறியும்புனிதநதியேமும் - பிறைநுதலா

(*கொங்கைக்குறி- கூவிளங்காய்,)கி- நன்

ஏன்பொடுபொடிக்கழங்கையாடுகின் றவெல்லைக்க ❊
னொன்பொருபெண்ணைவெழினசரு - மன்பனுள

மன்றெருருத்திக்குண்மை யறிவித் துத்தாமகிழ்க்கீழ்ச்
சென்றருளித்துநின் றதிருநகருஞ் - - சென்று

முதுககணகோளத்துமுற்பட்டகூத்தின் - ❊
பதுமமலர்ந்தபதியுங் - - கதிராழிக்

காவித்திருநிறத்தோன்கைக்குவித்துநின் றெதிரோ ❊
சேவித்துநிற்குந்திருப்பதியுந் - தாவுபரி

மல்லற்றெருடத்தொண்டைமான்சட்வுந்தேனாயொ
ருல்லைக்கொடிதடுத்தமுதாரு - நெல்லிலைக்குச் [ரு

சற்றறைந்தநாட்புகலிச்சைவப்புலவனுக்குக் - ❊
கொற்றவர்ந்தமாடக்கொடிநகரும் - பெற்றதொரு

தாயுமிலையென்னுந்தமதுகுறையையொரு - ❊
தூயசவைதவிர்த்ததொன்னகரும் - வாய்கலச

மாட்டியினிமையறிந்தவூனைச்சிரனை - ❊
யூட்டியவேட்டனுறைபதியுஞ் - - நாட்டினுள்

வெண்ணிலமணமொலாமேறக்சமுவிலொரு - ❊
பெண்ணையியலறிந்தபேருரும் - விண்ணவர்தஞ்

சாதலுறைநாளுஞ்சாகாதபுள்ளிரண்டுந் - ❊
தீதகல்வாழுந்திருமலையுந் - - தூதுதமை

(௨-சகை)

யோட்டுந்திருநாவலூராற்கிரந்திட்டுப் - ※
பாட்டுண்டவாரும்படைத்துடையோன் - சூட்டு
வெருவும்வரியரவும்வெண்டலையுமாறு - - ※
மருவுமுடிக்கம்பவாண - - னொருபுத்தன்
செங்கலெறிக்குச்சிவலோகமீந்தபிரான் - - ※
றங்கமணிமறுகுதோன்றுதலும் - பைங்கொடியு
மாடுங்கழங்குதவிர்த்தாயத்துடன்கனக - ※
மாடநெடுவீதிவந்தணுகிக் - - கூடப்
பணிந்துபரவிப்பகுவாயரவ - - - ※
மணிந்ததிருத்தோளழகு - மணங்கமழும்
பொன்னானமார்பும்புனையும்புரிநூலு - ※
மன்னானகாதல்வரநோக்கி - - மின்னுந்
திருந்திழையீரிந்தத்திருமேனிதன்னி - ※
லிருந்ததழும்பென்னதழும்பென்றாள் - புரிந்தவரு
மின்னேகிளியேவிளங்கிழையேயன்னமே - ※
யன்னேயிதனையறியாயோ - தன்னருளாற்
பாராட்டிவையம்பதினாலையும்வளர்க்கும் - ※
பேராட்டிமாதவத்தின்பேறுகாண் - வாரிதிசூழ்
வையமுழுதறியவாங்குஞ்சிலைமார - ※
னெய்யுங்கணைபடைத்தவேற்றங்காண் - டெய்யகுழற்

(உருக)

பண்பிறந்தசொல்லாய்பலசொல்லியேயிந்தப் [வி
பெண்பிறந்தார்க்கெல்லாம்பெருமைகாண் - மண்பர
யேத்துமிறையாளிருகொங்கையால்வளையாற் - *
சாத்தியகோலத்தழும்புகாண் - பார்த்தருளா
யென்னுமளவிலிலங்குமனத்துட்காதல் - *
பொன்னனையமெய்யிற்புறம்பொசியக், கன்னிவெயி
றீண்டமலர்வதொருசெந்தாமரைமுகைபோற் [னுங்
காண்டகையசெவ்விக்கவின்படைத்தாண் - மீண்டர
கோலமயிலைக்குறிப்பாற்கடைக்கணித்தாற் - *
போலமுறுவலுடன்போயகன்றான் - மாலைமதன்
செங்கைவரிசிலையைச்சேரத்தொடைமடக்கி - *
யெங்கள்பெருமானேயேகினான் - மங்கை

மங்கை.

புடைபோதஞாலமெலாம்போர்மதனன்வேதக் - *
கிடையோதிவைக்குமொருகிள்ளை - விடமும்
வளருங்கொடுங்கொலையும்வஞ்சனையும்பொய்யுங் *
களவுங்குடிபுகுதுங்கண்ணா - டெளிதேனுஞ்
சீலவுததியமுதுஞ்செழும்பாகும் - - *
பாலுமுதவும்பனிமொழியாண் - - மாலுதவு
(உகூஅ)

மிக்கதிருவழகின்வெள்ளத்தெழுந்தவிரு - *
மொக்குளனையமுலையினாள் - மைக்குழலிற்

பூவின்மிகுபொறையாள்பூணரமென்முலையா - *
ளோவவடியிட்டநுண்ணிடையா - ளாவிபெற

வார்வமுளதாகவாடவர்தன்மேல்வைத்த - - *
பார்வையறியும்பருவத்தாள் - - சேரச்

சுடருற்றபூவளைக்கைத்தோழியருந்தானு - *
நெடுமத்தவாரணத்தினின்று - விடையோன்பா

லன்னத்தைத்தூதுவிடவங்கையிற்கொண்டனள்போ
பன்னித்திலநிரைத்தபர்தேந்தி - யன்னதுதான் [ற்

பாவையொருபாகன்பாலணுகமாட்டாமற் - *
போவதுவும்ள்வதுவும்போற்றேன்ற - - மேவி

நெறிந்திருள்கொண்டைநெகிழ்ந்துததும்ப - *
நறும்புழுகின்கணைனைந்து - - - செறிந்து

சுரும்பினினங்கள்சுழன்றுசுழன்று - *
நரம்பெனவெங்குநனுங்க - - விரும்பி

யிடுங்குழையஞ்சவெறிந்திருகண்க - - *
ணெடுங்குமிழின்கணெருங்க - வடங்கொண்

மணங்கமழ்குங்குமவண்டலணிந்து - *
சுணங்கணிகொங்கைதுளங்க - - - வணங்கி
(உஎஅ)

மருங்குறளர்ந்துவருந்தவருந்த - *
விருங்கலைகொஞ்சியிரங்க - திரம்பி
யிலங்குபதங்களிடுந்தொறுநின்று - *
சிலம்புசதங்கைசிலம்ப - நலந்திகழும்
வல்லியினிதாடமடவாரணைந்துமலர் - - *
வில்லிபுரிவித்தமெய்த்தவமே - நல்லமட
மானேகலாபமயிலேமலர்பொதியாத் - *
தேனேதிளையளித்தெய்வமே - கானேயுங்
கோவையிதழ்வாய்க்கொடியேநமக்கிந்தப் - *
பாவியிடைசெய்தபகையுண்டோ - மேவியுடன்
மன்னுஞ்சிறையன்றின்மன்றிற்பணைமடன்மே - *
லின்னஞ்சிலநாளிருந்தாலோ - முன்னமே
வென்றேயிருக்கும்விழியுடனேயுள்ளபகை - *
யின்றேமதன்முடிக்கவெண்ணமோ - வென்றிமதன்
சேரும்வளைமலராற்றீண்டப்பெறும்வாழ்விவ் - *
வாரமணிப்பந்துக்கமையாதோ - பாருலகி
ருவிறகைமைக்கபோதனர்தங்காலத்தே - *
யாவியுடனிருந்தாலாகாதோ - பாவா
யமையுமமையுமெனுமவ்வளவிற்றேர்மே - *
லுமையொருபாகமுடையோன் - சமரமுக
(உஅஅ)

வீரனுக்குமெய்யன்பான்மேவுந்திருநீற்றுச் - [க்கு
சேரனுக்குஞ்சோழனுக்குந்தென்னனுக்கு - மோனு

மாரணற்கும்வாசவற்குமல்லாததேவர்க்கு - *
தாரணற்குமேனோர்கருநாதனார் - போர்முகத்தி

லாமநாட்டுகொண்டதலையாட்டுத்தலையாக - *
மாமனார்க்கிந்தமருகனார் - தாமாக

விங்கெமைபாட்கொள்ள வெழுந்தருளப் பெற்றோ
றங்குரமின்னார்கண்டகமகிழச் - செங்கேழ் [மென்

வயங்குமணிமாடமாமறுகிற்சென்ற - *
வியந்தமணிப்பந்தாடல்விட்டு - நயந்தணுகித்

திண்டோளுமார்புந்திருநீலகண்டமுங் - [சித்
கண்டோரைவாழ்விக்குங்கண்மலருங் - கண்டிறைஞ்

தாயபவரந்துவளுற்றுதோழியருந் - *
தாயருநிற்கத்தலைப்பட்டா - மூய

வெறிபுமழுவுடையாரிம்மாதின்காதல் - *
சிறிதுமுணரார்போற்செல்லக் - குறைவின்

மறைபுகலும்பூசைமனுவாலயத்தி - - *
லுறைதிருவேகம்பமுடையீர் - செறியிருளிற்

பந்தணுகுஞ்செங்கைப்பாவைபாற்சங்கிலியால் - *
வந்துழலுந்தூதுமறந்தீரோ - நொந்தொசியுஞ்

(உ௬அ)

சிற்றிடைபுல்லத்திருமார்பகங்குழைந்தீர் - *
நெற்றிவிழியுடையீர் நீரன்றோ - வொற்றியூர்ப்

பெண்ணைவறிவார்தம்பேரின்றுதொட்டெமக்கு *
விண்ணோர்பெருமானேவேண்டாவோ - வண்ண

மமைந்தாராரர்காதலினாலார்தலையிற்பெண்ணைச் - *
சுமந்தாராரர்மற்றுமைப்போற்சொல்லீ - ரமைந்து

துகைத்துமதுகரத்தாற்றேடுழுதார்தந்து - *
நகைத்துமுகம்பார்த்துநடவீர் - முகத்திலிவை

கண்ணன்றோவெப்படியுங்காதலித்தாலுமொரு*
பெண்ணன்றோகச்சிப்பெருமானே - யெண்ணி

லிருக்கிலறஞ்சொன்னீரொனுமாதைவிட்டுத் - [காலு
திருக்கடைக்கண்வைத்தவர்போற்செல்ல - வொருக்

மேவுண்டறிகிலொன்றெண்ணதேயேவுண்டா - *
லாவிபடுவதறியாதே - - யாவி

விறல்வேள்சிலையம்புவிட்டான்றனம்பின் - *
மறல்வேல்விழியாண்மனத்தே - பிறைமுடியார்

பாதிகருகப்படுபஞ்சபாணமதிங் - *
கேதுபடுத்தாதினையாளைக் - காதலுக்குச்

சங்கம்விழுமென்றுந்தாழ்கலைநில்லாதென்று - *
மங்கம்பசலைநிறமாமென்றுத் - - திங்கணிலா

(௩௱அ)

வீரஞ்சுடுமென் றுமேழிசைவேய்நீயென்று - *
மாரஞ்சுடுமென் றுமனறிந்தான் - சோர்வுற்
றடங்குமறிவினளாயன்னையர்தந்தோண்மேற் - *
றடங்கண்மயிறவர்ந்துசாய்ந்தாண் - மடந்தை

மடந்தை.

இளையார்மனம்வளையவெய்யுமதன்செங்கோல் - *
வளையாவகையசையும்வல்லி - யரகநறை
தேங்குகருமுகிலுஞ்செவ்வாய்முருக்குமொளி *
தாங்குபுருவத்திந்திரசாபமு - மாங்கழையும்
வாய்ந்தமொழிக்குயிலுமைக்கட்கருவிளையும் - *
பூந்தரளஞ்சேர்கழுத்துப் பூங்கமுகு - மேய்ந்தநகை
முல்லைநகையுமுலைக்கோங்குங்கைக்காந்தண் - *
மல்லன்மலருங்வரிச்சுணங்கா - மல்விமலர்
வேங்கையுஞ்சாயன்மயிலும்வியனழகுந் - *
தாங்குதிருநிறத்தசண்பகமும் - வாங்குமிடை
மின்னும்பதச்சூதமென்குழையுங்கொண்டொன்று
மன்னியகார்வேனிலுடன்வந்ததெனமின்னுகதை[யி
பக்கநிலவெறிக்கப்பத்மராகத்துவெயின் - *
மிக்கலரங்கத்துமேனின்று - முக்கணனைத்

தேவர்நெருங்குந்திருமயானம்பார்த்துத் - ✻
தாவிதிருமேற்றளிபார்த்து - - மேவி
யரன்விடாதாளுமனேகதங்காபார்த்துப் - ✻
பரவுங்காரைக்காடுபார்த்துப் - பெரிதிறைஞ்சிக்
கச்சைகொண்டான்மண்டபமுங்கண்டுமனமகிழ்ந்து
மங்கைகொண்டான்வாழுமனைபார்த்துக் - திங்கள்
சூடித்த்முடிக்குமுடிகொடுத்தசம்பன் - (யோன்
படைத்ததுலாமண்டபமும்பார்த்து, விடைக்கொடி
கச்சாலையும்பார்த்துக்கம்பர்தம்பாடியெனும் - [ச்
பொற்சாலையும்பார்த்துப்பூவைமொழிப் - பச்சைநிற
சைவமுதல்விதவஞ்செய்யப்பெற்றதொரு - - ✻
தெய்வவுலகாணித்திருக்குளமுந் - துய்ய
வறச்சாலையும்பார்த்தறுசமயம்வாழும் - ✻
புறச்சாலையும்பார்த்துப்பூவை - சிறப்புடைய
விந்நகர்போலென்னகருமில்லையிமையோர்பதியு ✻
முன்னவரிதனுக்கொப்பென்ன - வன்னநடை
மானேயிதன்பெருமை வல்லவரார்சொல்லுகைக்குத்
தானேயுவமைதனக்கல்லான் - மானேர்கட்
பொற்றொடியாள்கண்ணுதலைப்பூசித்தறஞ்செய்யப்
பெற்றதிதுபோற்பிறிதுண்டோ - மற்றிவளுக்

(௱௨௭)

கர்தமுதலில்லாதவாதியொருமாவடிக்கீழ் - *
வந்துவெளிப்பட்டநகர்மற்றுண்டோ - நந்தா

மருக்காவின்மூன்றுமணிவிளக்குமன்னி - *
யொருக்காலு நீங்காதுறையுந் - திருக்காமக்

கோட்டமென்னிலிங்கேகுலவுங்கனகமழை - - *
யீட்டமுகில்பொழிந்ததிவ்விடத்தே - கூட்டியபே

ராசையுடன்மால்பத்தவதாரந்தம்மிலும்வந் - *
தீசனைப்பூசித்ததிவ்விடத்தே - பேசநல

மொன்றுபுரிந்தவொருகோடியாகுமிதி - *
லென்றுமொழிகின்றவெல்லைக்கண் - மன்றற்

றிருக்கொன்றைமாலையளிசெவ்விமணமுண்டு - *
தருக்கியநாதந்ததும்ப - வெருக்கமலர்

பாயுஞ்சடாடவிமேற்பாகீரதிமுகங்க - *
ளாயிரமும்விசியலையெடுப்ப - - வோயா

தருகிலிருபாலுமருமறைகளொன்கும் - *
பரிகலமுமாலையுடன்பாட - - வொருதன்

திருக்கைத்தமருகத்துத்தெய்வச்சுருதி - *
பெருக்கத்திசைமுகத்திற்பெய்ய - விருப்பொடரி

தேடு திருவடியிற்செம்பொற்சிலம்போசை - *
பூடுங்ககனத்துலாய்நிமிர - - - நீடு

(ஞானன்)

நடஞ்செய்தருள்காக்கு நாயகரும்வானந் - [றையார்
தொடும்பொன்மணித்தேருந்தோன்ற - கொடிங்கு
கோதையசையக்குழலசையக்கோல்வளைக்கை ※
மாதர்பலருடனேவந்திறைஞ்சிச் - சோதி
மிகக்கருணையெப்போதும்வீற்றிருந்தசெவ்வி - ※
முகத்தழகைக்கண்ணான்முகந்தா - ணிகர்ப்பி
றவளத்திருநீறுஞ்சந்தனமுந்தோய்ந்த - ※
பவளத்திருத்தோள்களார்த்தா - ளிவளும்
மலர்மார்பிலாசையெலாம் வைத்தாண்மைக்கண்ணீர்
புலராமனஞ்சம்புலர்ந்தா - ளுலகுண்ட
இன்பால்விடையீர்திருச்சேதாணலங்கண்ட - ※
பெண்பாவியாவிபெறுமாறு - கண்பாரீ
ரொன்றபொழுதிற்கச்சியேகம்பரோகுதலு - ※
மன்றன்மலர்சொரியமாரவேள் - நின்றயர்ந்த
தந்தைமொழிக்குயிலைத்தாயொடுத்தணைத்துச் - ※
சித்ரமணிமண்டபத்திற்சேர்வித்து - முத்திரைரு
பந்தருமிட்டார்பனிநீரையுஞ்சொரிந்தார் - ※
செந்தளிரின்பாயலின்மேற்சேர்த்தினார் - சந்தனமும்
பூசினார்கொண்டமயல்போமோவென்றுயிருமும் ※
பேசினார்தாயார்பெரிதிருந்து - - கூசாதே

தண்ணெண்கழுநீருஞ்சாத்தினார்பார்த்தயலா - *
ரொன்னமுமக்கொளாறுமில்லையோ - வொண்ணுதலீர்

முத்தினொருபந்தன்முழுநிலாவீசுநிழ - - *
லித்தருறைதேமாநிழலாமோ - பித்துளதோ

வாசப்பனிநீர்மணலையவராகப் - - *
பூசித்தவாற்றின்புனலாமோ - யாசிழைக்குப்

பாயல்குளிரியடுத்தாலப்பாய்விடையோன் - *
கோயிலினமாவின்கொழுந்தாமோ - நேயமுள

பொற்றொடிநல்லீர்புனைசந்தனச்சேறு - *
நெற்றிவிழியவர்தனீருமோ - - கற்றறிவி

ஞாற்றுயிரநாணொடித்தாலவையிவளுக் - *
கேற்றார்திருவஞ்செழுத்தாமோ - மேற்றான்

பிணைந்தவண்கழுநீர்பெய்வளைக்குக்கம்ப - *
ரணிந்ததிருக்கொன்றையாமோ - வணங்கனையீ

ரொன்றுமொழியியவையவையாயினவோ - *
னின்றதிவளாவிநீங்காம - - லன்றே

தெரியவேயாவர்க்குஞ்சிந்தாகுலமு - *
முளையுந்தெளிவுதரலுற்று - ஏரிவை

(௩௫௩)

கமலமலர்சுமந்தாள்கட்டழகுமேனு - *
னமுதமுடன்வந்தாளழகுஞ் - சிமயமிசைக்
கூசிமழைதவழுங்கொல்லிக்கிரியடைத்தாள் - *
பேசவரியதொருபேரழகும் - வீசுமிளந்
தென்றலும்வென்றிச்சிலைமாரனைக்கணையு - *
மன்றலுமொன்றானவடிவினாள் - பொன்றுமொரு
காலமும்பார்த்துக்கயறும்பிடித்தொருவன் - *
சூலமுமேந்திச்சுழலாமன் - - மால்செய்
துலவாநகையாவொசியாவசையா - - *
குலவாவுயிருண்ணுங்கூற்று - தலைவிக்கைக்
கோணம்பெறவகுத்தகோயில்போலியாவனையுங் *
காணுந்தொறுமயக்குங்காட்சியாள் - - பேணி
மகிழ்வுற்றவாயமுடன்வண்டரளமாலை - *
திகழ்சித்ரமண்டபத்திற்சேர்ந்து - மகர
விடந்தோய்விழியங்கெழுதியவையெல்லாம் - *
நெடும்போதுபார்த்தகலாநிற்ப - வடைந்தெவரு
மின்னறிதுவிதுவென்றெங்களுக்குக்காட்டியரு *
ளன்னநடைநடைவிலனை - - மின்னிடையீர்
வெள்ளிமலைநீங்கியிங்கேனுமன்னேனுரு - *
முள்ளும்பிரானையுமையாள்போ - - யுள்ளமிகத்

(௬௪௪)

தாங்காதபூசைக்குத்தக்கவிடமீதென்று - - *
நீங்காதுநின்றநிலையாரீர் - தேங்கமழுங்

காவிபுடைசூழ்ந்தகம்பாநதிப்புனலிற் - *
பாவைபடியும்படியாரீர் - - சோலையினு

ழோசையளிகளுலவம்பிகாவனத்தில் - - *
வாசமலர்கொய்யும்வகையாரீர் - பேசரிய

வாதியமரரறியாவவராக - - *
மாதுகுவித்தமணல்யாரீர் - - கோதை

யணியுமிருளோதியன்னொடுபூசித்துப் - *
பணியும்வழிபாடுயாரீர் - - ரிணையிலிமுன்

மேவுபுளகமுடன்வெண்ணீறுமெய்க்கணிந்து - *
தேவியிருந்தசெயல்யாரீர் - - பூவிற்

கரந்துமழைபொழியாக்காலத்தேகம்பை - *
பரந்துவரும்பெருக்கைப்பாரீர் - விரிந்தபுனல்

மாகம்புதையவரப்பண்ணித்தம்மையொளித் - *
தேகம்பர்நின்றவிடம்பாரீர் - - தோகை

பரும்புனல்கண்டஞ்சியவராகமுறச்சென்று - *
பரிந்துதழுவியதுபாரீர் - - புரிந்து

மலைக்குமகடன்வழிபாடுவந்து - *
பலித்தபெரும்பேறுபாரீர் - கலப்பொழு

(௬௭௬)

நெறிவையுடனிர்தத்தேமாணிழலிற் - *
பரமனிருந்தவிடம்பாரீர் - - பொருவி
றிருக்கைவளையான்முலையாற்றிண்டோளுமார்பும் *
பார்த்ததிருத்தழும்புபாரீர் - - விரித்தசடை
யண்ணல்வெளிப்பட்டருள்வரங்கள்பாரீரொன் - *
றெண்ணும்புதுமையிவையெல்லாமொண்ணுதலாள்
காட்டவவருங்களிகூர்பொழுதிலொரு - *
தேட்டமுளதாய்சிந்தையளாய்க் - - கூட்டி
யிருந்தகிளியையினிதுகரத்தேந்தி - *
வருந்திவினையேன்பெற்றவாழ்வே - யருந்தவமே
தேமென்குதலைதருந்தெள்ளமுதேகம்பரணி - *
தாமந்தருவாய்தவிருவா - யாமெல்லாஞ்
சூழநிலவிற்சுதைநிலாமுன்றிலின்யான் - *
வாழும்படிநினைக்கமாட்டாயோ - வேழந்
திசழும்வரிசிலையான்சேவகங்கள்காட்டும் - *
பகழிநறும்பூவாகப்பண்ணு - யிசழ்வார்மு
னென்னன்னையேதுமிரங்காளிரவுபக - *
லுன்னன்னையுன்னையொறுக்குமோ - தென்னன்
பொருப்பிற்பிறந்துபுகையாகவீசு - *
நெருப்புக்குளிரநினையாய் - நிரைத்தரளத்

(௯அசா)

தாருங்கழுநீருஞ்சந்தனமுந்தோய்ந்தபனி - *
நீருங்குளிரநினைந்திடாய் - - பேராவச்
செவின்மணிவருத்தந்தீர்த்தருளாயென்றிருந்து *
பூவையினிதுரைக்கும்போதின்கண் - டேவருய்ய
வாலயினியவமுதாகவுண்டபிரான் - - *
கோலமறுகுகுறுகுதலு - - நீலவிழி
தூதுவிடக்கிள்ளைக்குச்சொல்லுவதெல்லாமறந்து *
காதலுடன்வந்தரனைக்கைதொழுது - - நீதிபுரி
யிந்தமலைப்பாவையிடப்பாகங்கொண்மைக்குத் - *
தந்தவலப்பாகந்தரலாமோ - வெந்தைபிரான்
கங்கைத்திருமுடிமேற்கண்ணியலால்வெண்ணீறு *
தங்குபுயக்கொன்றைதரலாமோ - சங்கரா
வெம்பாகநீரணைந்தாலிவ்வுடம்பிற்பச்சென்ற - *
செம்பாகம்வந்துசிவக்குமோ - நம்பாநின்
சோதிமணிமுடிமேற்சோமப்பணிக்கொழுந்தை - *
மோதுமுதுதரங்கமோதாதோ - வோதாயென்
றோதியுடன்சொல்லவறம்வளர்க்குமூருடையா - *
னேதுமுணாயானெழுந்தருள - - மாத
ரரிந்துமகவையளித்தவர்களாக்கிச் - *
சொரிந்தகறியமுதுஞ்சோறு = மருந்த

(ஙககா)

விருப்பினொடுசெங்காட்டில்வேண்டும்பொழுதோ ✻
திருப்பவளச்செவ்வாய்திறப்பீர் - விருப்பால்
வளைந்ததிரிபுரத்தைமாள்விக்கும்போதோ - ✻
குளிர்ந்ததிருமுறுவல்கொள்வீர் - துளங்குநிலா
முத்தவரிசிலையான்மொய்ம்பூங்கணைபுகுந்து - ✻
தைத்தபொழுதோதிருக்கண்சாத்துவீர் - மெய்த்தக்
கொடியவிடஞ்சுரனைக்கொல்லும்பொழுதோ - ✻
வடையவருளுடையீராவீர் - - மடமாத
ருற்றதுயர்கேட்பதற்கொள்ளோதாதுபோகின்றீர் ✻
சுற்றதிதுவோகள்ளக்கம்பமோ - பெற்றவர்தாள்
வீசுமழுவாற்றுணியவெட்டுமவர்க்கல்லாது - ✻
வாசமலர்க்கொன்றைவழங்கீரோ - - பூசித்து
வல்லபங்கள்செய்துவழிபடுவார்க்கல்லாது - ✻
புல்லவொருவர்பொருந்தீரோ - சொல்லி
ரொருவாசகமென்னவோராதுபோலப் - ✻
பொருமாரனைநிறுத்திப்போனீர் - தெரிவை

தெரிவை.

யொருத்திதவக்குறும்பையோட்டியுலகெல்லாந் ✻
திருத்திமதனடத்துஞ்செங்கோ - லிருத்தனர்
(சாரு)

தூதுவிடச்சங்கிலியாற்றோழனுக்குத்தாமூன்ற *
போதிதுவென்றென்னும்புரிகுழலா - ளர்திலையான்
வெண்டிரைநீர்வேணிக்குவேறுமொருதிங்கணமக் *
குண்டனவென்றெண்ணுமொளிநுதலா - ளுண்டமதி
வேணியுடையோன்மிடற்றிலடக்குதற்கும் - *
பாணிமிசையசையப்பண்ணுதற்கும் - பாணந்
தொடுப்பதற்கும்பார்ப்பதற்குஞ்சூழ்கழற்காலன் *
விடுப்பதற்குமெண்ணும்விழியாள் - விடைக்கொடியோ (மேலா
ராயபிறப்பையணுகாதவருடைய - - *
தூயபிறப்புணர்த்துந்தோளினா - ளயனுஞ்
சேமச்சிலையுஞ்சிலையுமிவையென்று - *
தாமுட்குறிக்குந்தனத்தினாள் - மாமழுவோன்
தென்றல்படச்சுழைந்ததேமாவின்கொம்பரிது - *
வென்றுதிருவுள்ளத்தினிதென்னா - வொன்றுகத்
துய்யவளைக்கையுந்துவர்வாயுஞ்சோதிதிகழ் - *
மெய்யுநிறமும்விளங்குவாள் - மொய்யமரிற்
றுவும்விடையுடையான்றன்மேன்மலர்வாளி - *
யேவுமதனையெரித்தநாள் - - மேவுற்
றெழும்புகையும்வானமுமென்னவோமம் - *
வொழுங்குமிடையுமுடையா - டொழுஞ்சுராக்
(சாஉரு)

காக்குமிடற்றூர்க்குக்கச்சாதல்காப்பாத - *
லாக்கநினைப்பூமகலல்குலா - - ளேக்கரிய
தாவிமயிலனையார்சூழவொருகமல - - *
வாவியருகுமகிழ்ந்திருப்ப - மேவியயி
(*லுண்கண்)விறலியொருத்திசெழுங்களபக் - *
கொங்கையிணைபடைத்தகூற்றமே - யெங்குமளி
நின்றேவிடுகின்றநீள்வனசக்கோயிறனக் - *
கின்றேகுடிபுகுதவிட்டநா - - ளொன்றாக
விஞ்சவழகுடையார்வீற்றிருப்பதல்லாது - *
கஞ்சமலரொருத்திகாணியோ - வஞ்சாதே
யிந்தவழகல்லாமேலந்துமோகஞ்சமலர் - *
தந்தவழகுதனையென்று - செந்திருமுன்
சென்றுபணியத்திருவாலவாயுமணி - *
மன்றுமொருகடவுண்மாநிழலு - மென்றும்
விரும்பியுறைமழுவாள்வீரன்றசாங்க - *
மிருந்துவிறலியாடென்னத் - தெரிந்தபெரும்
பாகுபலவுடையான்பாட்டுக்கொருவடிவான் - *
றியாகமுதவுத்திருமலையு - - - மாகம்
பெருக்குமாறுதம்பிறைக்கொழுந்தும்பாம்பு - *
மெருக்குமுடித்தமணவியாறும் - விருப்பொடர

(*உண்கண் இனவெகுளை.)

ணந்தண்பெருந்துறையிலாளுடையாரம்மணலில் *
வந்துசிறந்தவளநாடுஞ் - - சந்தும்

வடங்கொளிளமுலையால்வானோரறியா - *
வுடம்புகுறிபெற்றவூரும் - தொடர்ந்தவரி

நீலம்போற்கண்ணார்நிறமெல்லாந்தன்னுடைய - *
கோலம்போலாக்குங்குளிர்தாரு - மாலிலையிற்

சேக்கைப்புயலின்றிருநாபியிற்பனவன் - *
வாக்கிற்பிறந்தவயப்பரியு - - நோக்கித்

திரண்டாயிரங்கயிலைசெல்வதெனத்தோன்று - *
மிரண்டாயிரங்கோட்டிபமு - நெருங்கு

கடிக்கற்பகவனத்தைக்காசினிமேலாயர் - *
கொடிக்குக்கொடுத்தகொடியுந் - துடிக்கட்

டழங்குசதியுடையான்றாண்டவத்துக்கேற்ப - *
முழங்குதிருக்கைமுரசுந் - தொழும்பா

லடுத்தசுரர்பரவ(*வண்டாண்ட)மெல்லாம் - *
படுத்ததிருவாணையுமேபாடத் - துடிக்கவிதழ்

நெஞ்சுதரர்ந்துநெறிமயங்கிநீடுயிர்த்து - *
வஞ்சியறிவழிந்துமாலகி - - யஞ்சாதே

யாகம்பிரியாவவளையறியாம - - *
லேகம்பர்தாமேவர்தெய்திலே - மோகங்கொண்

(* அண்டாண்டம் - என்பது - அண்டபகிரண்டம்,)

டாரமருவியகன்மார்பி லென்னையவர் - ✻
சேரவரவணைக்கத்தேடிலேம் - பாரடையத்
தாவும்விடையுடையோன் றன்மேற்றனத்தழும்பு ✻
மேவுங்கலவியிளைக்கிலேம் - பூவினறும்
பாயலணைந்தலம்பாராட்டி யென்னையவ - ✻
ராயபுலவியகற்றிலே - நேயமுடன்
போகவுததியினிற்புக்கழுந்தி நெக்குருகி - ✻
யாகமிருவருமொன்றாகிலேம் - மாகத்
தணைத்ததறிபவவரணிந்த நீறென் - ✻
பணைத்தமுலைமேற்படிலேம் - மணிக்களத்தா
ரின்றுமணந்தபடிக்கென் னுடம்புசான்றாகக் - ✻
கொன்றைமணநாறக்கூடிலே - மென்றிருந்து
வாழும்படி தன்மனத்திற்பிறந்த தெல்லாந் - ✻
தோழியுடனிருந்து சொல்லுங்காற் - சூழ
நெருக்காரமாலை நெடுநிலாவீசுந் - ✻
திருக்காவணநிழலிற்சேயுந் - திருத்தாள்சேர்
சிலம்படைத்துத்திருநீறிடவயிற்றிற் - ✻
சூலைகொடுத்தாண்டதொண்டனை - மோலையுடன்
சென்றுதடுத்துத்திருவெண்ணெய்நல்லூரி - ✻
லன்றுபடைத்தவடியாளுந் - கொன்றைநறுந்

தேன்பாய்முடிமேற்றிருச்சேட்ஞலூர்தன்னி - ✻
லான்பால்சொரிந்தாட்டுமந்தணனுந் - தேன்போலத்

தித்திக்குமாறுதிருவாசகஞ்சொன்ன - - ✻
பத்திப்பெரும்பெருக்குப்பாலனு - மெத்திசையுஞ்

செல்லவரியசிவதத்துவமல்லா - - ✻
தில்லையெனவெழுதிவிட்டோனு - நல்லதவஞ்

சூழ்வாருஞ்சூழ்ந்துவரச்சூதத்திருநிழலின் - ✻
வாழ்வோன்மணமறுகில்வந்தணுகத் - தாழ்குழலு

முற்றநினைந்தவெல்லாமுன்வந்துகைப்புகுதப்(டியா
பெற்றவர்போல்வந்துபெரிதிறைஞ்சிப் - பொற்றொ

டியியபுரிநூலுந்தோளுந்திருமார்பு - - ✻
மையல்பெருகவரநோக்கித் - தையலா

ளீசன்றன்மார்புநல்லெண்டோளுநீங்காத - ✻
வாசநறுங்கொன்றைமாலையே - பாசறையில்

வீசுபனிநீருமிக்கவகிற்சந்தனமும் - ✻
பூசவுனக்குப்பொறுக்குமே - வீசிவரும்

போதாருந்தென்றல்புகுதுகைக்குமாளிகையின் ✻
வாதாயனந்திறந்துவைப்பையோ - - நாத

மளவேயளவேயென்றுயரிராவுதுந் - ✻
துளேவயுனக்குச்சுடாதே - குளிர

(சருரு)

வடித்தசெழுங்கழுநீராலேபடுத்த - - *
படுக்கைசருகுபடாதே - கடக்கவரி

தாயவிரிகங்குலடன்மாமதன்சொரியுஞ் - - *
சாயகங்களுன்மீதுதையாவே - மாயவிரா

வெண்ணிலாவூழியெறித்தாலுமிங்குனக்குத் - *
தண்ணிலாவேதுந்தழலாதே - - நண்ணுமய

லையிடையாருமன்னையருந்தாமொறுக்கும் - *
வெய்யவுரைகேட்கவேண்டாவே - பையவருஞ்

சேவின்மணியிசைக்குந்தீராவலைகடற்குங் - *
கூவுங்குயிலுக்குங்கூசாயே - - மேவியநின்

முன்றிலுயர்பனையின்மூரிமடற்குடம்பை - *
யன்றிலரிக்குரற்குமஞ்சாயே - யென்றாலும்

வெய்யபசலைவிளைவானேன்மேனியெங்குந் - *
துய்யமலர்க்கண்ணீர்சொரிவானேன் - செய்யவங்கை

வண்டுவிழுவானேன்மற்றெனக்குச்சொல்லென்று *
கெண்டைவிழிமாதுகேட்பளவிற் - திண்டிறல்வேள்

காவியொழிந்தகணைசொரிந்தானவ்வளவிற் - *
றேவர்களுந்தன்றெருவகன்றான் - பாவைமே

லாரவடமுமணிந்தார்குளிர்ந்தபனி - *
நீருமடவார்நிரப்பினர் - - பேரிளம்பெண்

(சகரு)

பேரிளம்பெண்.

டிண்மைமதனன்செலுத்துகின்றபேராண்மை - *
பெண்மையழகின்பெரும்பெருக்குத் - தண்மலரோ
ருவுமரவிறந்தஞானத்தாற்பேரழகாற் - *
பூவுமரசாளப்போதுவா - - - - டேவ
ரரசனிமையாதவாயிரங்கண்சூழத் - *
தருநிழலில்வாழத்தகுவாள் - - விரவி
யினியகலவிநலமெல்லாமதனன் - - *
மனைவியையுங்கற்பிக்கவல்லாள் - கனைகடல்சூழ்
பாரைப்பெரிதுழைக்கப்பண்ணிப்பழையசுர - *
ரூரைப்பெரிதுழைக்கவொட்டாமல் - வாரிட்டுக்
கட்டுண்டனமென்றுநாணிக்கவிழ்ந்துதலை - *
யிட்டனபோற்சாய்ந்தவிளமுலையாள் - கிட்டரிய
சைவப்பெருமைத்தமிழ்நாடறிவித்த - *
தெய்வப்புலவன்றிருமுறையும் - வெவ்வமண
ரீருமதயானைக்கிடும்போதுமஞ்செழுத்தைத் - *
தேருமரசன்றிருமுறையுஞ் - சேரனுட
னன்றுகயிலைக்கதிமதவெள்ளானையின்மேற் - *
சென்றபெருமான்றிருமுறையுந் - தென்றிசையின்
(சஎச)

மாடப்பெருந் துறையில்வந்தவருட்கோலந் - *
தேடித்திரிந்தோன் றிருமுறையுங் - கூடவினி

தோதியவர்கடிருவுள்ளக்கருத்தினுரை - *
சோதினிலைமையெல்லாங்கும்பிட்டுச் - சோதிதிக

ழஞ்செழுத்துமேகம்பராடுந்திருக்கூத்து - *
நெஞ்சழுத்திவைக்குநிலைமையாண் - மஞ்சு

பொருந்துமணிமாளிகையிற்பூங்கவரிவீச - *
விரும்புமணியாசனத்தின்மீதே - யிருந்தெவரும்

பேசவரியபிரானார்திருவார்த்தை - - *
யாசையுடன்கேட்புழிவந்தாங்கொருத்தி - வாசலின்க

ணின்றொருமறையோனீறணிந்தகோலமுட - *
னென்றுள்வரவிடைவையென்றுரைத்துச் - - சென்றெதிர்கொண்

டங்கைகுவித்தோராரியாசனத்தினில்வைத் - *
தெங்கடவம்வந்தவாறென்றுரைசெய் - தங்கமுடன்

முன்னைமறைநான்முதலாயவெக்கலையு - *
நின்னிலறிவார்நிலத்தில்லை - மின்னுசடை

யீசனிலைமைக்குமேனையிமையோர்நிலைக்கும் - *
வாசியுரைதெளியும்வாறெனன்ப் - பூசுரனு

மென்னிலைமைசோதிக்கவென்றேவிதுசொன்னாய் *
நன்னுதலேயென்றுநகைசெய்யா - - வுன்னி

யிதனையிதனுடனேயெண்ணலாமென்னு - *
மதனைவினவுதலேயன்றி - - - மதியதனி
லெண்ணமிலாதார்போலவெல்லாமினிதுணர்ந்த - *
பெண்ணமுதேகேட்கப்பெறுதியோ - மண்ணுலகிற்
குன்றிதனையொருபொற்குன்றமுடனிகரு - *
மென்றுதிரிவாரையென்செயலாந், துன்றிருள்போம்
விஞ்சுசுடருடைத்தாய்மின்மினியேயவந்துதிக்குஞ் [க்
செஞ்சுடரினென்பாரைச்செய்யுமதென் - றஞ்சமென
கல்லானிழலிருந்தகண்ணுதலார்தம்முடனே - *
யெல்லாரையுந்தேவரொன்றுரைத்த - னல்லாயோய்ப்
பேதுநிகராவிரும்பினையும்பொன்னினையுந் - *
தாதுவெனவுரைக்குந்தன்மைகாண் - மீதுலவு
நீடுசுடராழிநிலத்தேரிலீரிரண்டு - - *
பாடுசுருதிப்பரிபூட்டித் - - தோடார்
நளினத்துப்பாகனடத்தவெரிவாய்த் - *
துளவப்பகழிதொடுத்துக் - கொளுவியநாண்
மூரிப்ரவாகமுதண்டமுந்தாங்கு - - *
மேருவெனுஞ்சயிலம்வில்லாக - வார்வமுள
மூவருயிர்வாழமுப்புரமுநீறாக - - *
யாவர்பொருதாரிமையோரிற் - - றேவர்
(சகூச)

பழித்தபெருவேள்விபழுதாகவாள்விட் - *
டழித்தவிமையவர்வேறார்தா - னிழைத்து
வதைப்பான்வருங்கூற்றைமார்க்கண்டர்க்காக - *
வுதைத்தாரிவரல்லாதுண்டோ - - வெதிர்த்த
வழற்கான்மதன்மாளக்கண்மலரால்வெய்ய - *
வழற்றுணையேவினாரார்தா - னிழற்பொற்
கலையானிடந்திட்டகண்ணுக்கோராழி - *
விலையாகநல்கினார்வேறார் - - நிலையாகத்
துன்னுமொருசிலந்திசோணாடுங்காவிரியு - *
மன்னியரசாளவைத்தவரார் - பன்னெடுநா
டேடியிருவர்திரியத்தெரியாம - - *
னீடுசுடர்வடிவாய்நின்றவரா - ராடலென
வுங்காரஞ்செய்தேயுலகுண்டமாலயனைச் - *
சங்காரஞ்செய்துபின்னுந்தந்தவரார் - பங்கயன்மால்
வீந்தசுடலைவிபூதிதரித்திருவ - - *
ராந்ததலைமாலையணிந்தவரார் - மாய்ந்திடவே
நாராயணருடனுநான்முகனுங்கூடலுங் - *
கூராயசூலமிசைக்கொண்டவரார் - சேர
வெரிந்தபிறையெயிற்றினீணாந்துவாயும் - *
பரந்துசெழுங்குருதிபாய - நெரிந்தொருவன்
(ருாச)

மான்றுகிடக்கமலையான்மகளுடனே - *
மூன்றுவிரலொன்றுடையவரார் - தோன்றியட

லோதவிடமுண்டுபயநிறத்தாமரைமேற் - *
கோதையர்க்குத்தாலிகொடுத்தவரார் - மாதவனைக்

கூடியயனைக்கொடுத்தவரார்மோகினியா - *
நாடுமெழிற்சாத்தனைமுனல்கினரார் - பாடார்ந்த

புத்தேளிரொன்னைப்புனைந்தவராரல்வினுமை - *
கைத்தாளங்கொட்டவடங்காணபவுரார் - மத்தமுறு

மாகிடநடுமாலுதிரமத்தனையுங்கைக்கலத்திற் - *
பாதிதனிலேநிறையப்பண்ணினரார் - வேதமுடன்

றுண்ணெனவேயாழிபுகுஞ்சோமுகனைச்செற்றிடுமீ
கண்ணைபுகிராற்களைந்தவரார் - கண்ணனு [ன்

ராமைவடிவந்தனிலுமாதிவராகந்தனிலு - [ம்
மாமுதுகோட்டைக்கரத்தால்வாங்கினரார் - தாமறைபு

பேசரியசிம்புளாய்ப்போராடகனையடுங் - *
கேசரியைவள்ளுகிராற்கீண்டவரார் - கூசா

தடருஞ்சலந்தரனையன்றாழிகூட்டி - *
யுடலம்பிளந்தவர்வேறுண்டோ - படிவிண்

முழுதளந்தமாயன்முதுகெலும்பைச்செந்நீ - *
ரொழுகவேவாங்கினர்வேறுண்டோ - பழுதெண்

(௫ாயச)

டடமலரோனுச்சித்தலையையுகிரா - *
லுடனேகுறைத்தவர்வேறுண்டோ - நெடுவிசும்பு
முற்றும்புதைத்தலையாள்மோதுஞ்சுரநதியைச் *
சுற்றுஞ்சடையிற்சுவறுவித்து - மற்றும்
பகீரதனின்றாழிநாட்பாதமலர்போற்ற - *
மகிதலத்தேபோதுவித்தார்மற்றார் - புகழைச்
செலுத்தச்சிறுத்தொண்டர்தேவியறுத்தாக்கிக் - *
கலத்திற்படைக்கறியைத் - தலைக்கிட்ட
சுட்டியுமாலைச்சுரிகுஞ்சியுமுத்துங் - - *
கட்டியைநல்குங்கனிவாயு - மிட்டதொரு
வாளிபுங்காதுமருங்குமணிவடமுந் - *
தாளிணையுஞ்செம்பொற்சதங்கையுமாய் - மீளப்
பிறப்பித்தவர்தம்பெரும்பிறப்பையெல்லா - *
மறுப்பிக்கவல்லவர்தாமற்றார் - நறைக்கொன்றை
யாதிதனையொழியவாறாறுதத்துவத்தின் - *
மீதுமகிழ்த்திருக்கும்விண்ணவரார் - மாதிற்
பொருநீதிவிடையாகப்பூத்துழாய்மாலை - *
விரும்பிநடத்தினர்வேறா - ரரன்பெருமை
யின்னம்பலகோடியில்லையோயாமிருந்து - *
சொன்னபொழுதேதொலையுமோ - வுன்னரிய
(ருஉச)

மூவாமுதலாமுதல்வனையுமூவுலகிற் - - *
சாவார்பிறப்பார்கடங்களையுந் - - தேவாக
வொக்கநினைவாருக்கல்லவோவோரேழு - *
மிக்கநரகம்விதித்ததுகாண் - - மைக்கண்
மருவார்குழலியெனமற்றவளுமந்தப் - *
பெருவாழ்வுடையபிரானைப் - - - பரவியவர்
தெய்வவெழுத்தைந்துமோதித்திருநீறு - *
மெய்யிலணியவிதியற்று - - மையறரு
மெட்டெழுத்தையோதியிடுவார்மண்ணைப்பொழு
கட்டுணாக்கவென்னக்கெளவுதமனுறிட்டபெருஞ்[தங்
சாபத்தியல்புதரு'மாமறையோர்செய் - - *
பாபக்கலிகாலப்பண்புகாண் - - கோபவிதழ்
மின்னேயெனச்சிறந்தும்வேதியராகிப்பிறந்து - *
மென்னேபெருமையிருந்தவா - - முன்னை
மறையினெழுத்தைந்தும்வாயாரவோதி - *
நிறையவணிந்துதிருநீறும் - - பிறவியெல்லாம்
வாட்டவறியாமல்வாளாப்பிறவிதனை - - *
யீட்டுவதேபாவமெனவுரைத்து - வேட்டவெலா
மொண்டொடியும்வேதியனுக்குள்ளமகிழ்ந்தளித்து
வண்டணியும்பூவணைமேல்வந்திருப்பப் - டண்டுவிட
(௫௱௪)

பூண்டபிரான்பாகத்தொருத்திமுலைத்தழும்பு - ※
கொண்டபிரானுடைக்குழுவெல்லாந் - தண்டகமா
நன்னாட்டுத்தேவர்கணாயகனார்சோணாட்டின் - ※
முன்னாட்டுமென்றின்முதலியார் - தென்னாட்டிற்
கூடுமபிஷேகச்சொக்கனார் துங்கமணி - ※
மாடநெடுவீதிவந்தணாக - வாடகப்பூஞ்
சோதிச்சிலம்புக்குஞ்சூழ்பாடகத்துக்கும் - ※
பாதத்தழகைப்பகிராதே - - மோதிளநீ
ராணமுலையழகையாரவிளவண்டலுக்கு - ※
நானநறுந்தொய்யலுக்குநல்காதே - வானநிலா
வாரமணித்தோளழகைக்கரும்புக்கு - ※
மீரமிலாவல்லிக்குமீயாதே - - தாளைப்
பலவுநிரைத்தன்னதொடைப்பாளைக்களகங் - ※
குலவுமழகைக்கொடாதே -- - கலவிநலங்
கொண்டதிருமார்புங்குளிர்ந்ததிருச்சாந்தும் - ※
வண்டணியுங்கொன்றைமலர்த்தாருந், தொண்டருள
வந்தாமரைமலரவானந்தத்தாண்டவஞ்செய் - ※
செந்தாமரையுந்திருச்சிலம்புஞ் - - சிந்தை
மகிழமகிழவணங்கிவளையெல்லா - - ※
நெகிழநெகிழவெதிர்நின்று - சகமேற்

(ருசச)

பிறவாமலெண்ணிறந்தபேரண்டமாய்ந்து - *
மிறவாதமேனியிறைவா - - வுறவாய்ச்
சிரித்துமுகம்பார்த்துத்திருக்கொன்றைமாலை - *
தரித்ததிருத்தோளழகைத்தாரீ - யொருத்திகுறி
யாக மிசையில்லையாமாகிலிப்பொழுதே - *
யேகவுமைவிட்டிருப்பேனே - - வாகிலுநான்
கட்டியிறுகக்கலந்துருகியொன்றாகி - *
யிட்டகுறியழித்தாலியார்தவிர்ப்பார் - பட்டதுயட்
டாவல்கெடப்புல்லியகலாமலியான்வளைத்தா - [ப்
லேவலொளைத்தள்ளியுமையேகுவிப்பார், மேவியெனை
புல்லியொருக்காலும்போகாவகைபிணித்து - *
வல்லபடிகாணமாட்டேனே - - நல்லமட
நாண்கொண்டதாருவன நங்கையைப்போல மனம்
வீண்கொண்டுபோகவிடுவேனே - மாண்கொண்டு
பூத்ததிருநீறம்புயமுந்திருமார்பு - - *
மேத்துமவர்க்கருளீரென்னென்று - வாய்த்தசொலா
லாவதெல்லாம்பார்த்தாளவளுந்தழுவுகைக்கவ் - *
காவதெல்லாம்பார்த்தாலவைவருமோ - வாவி
யுருகும்வகைகாதலுண்டாகநோக்கி - *
விரவுநகைகொண்டேகிவிட்டார் - - தரள
(௫௫௪)

மிடையுநகையாரிவரெழுவரிங்ஙன் - ✲
கொடியபெருங்காதல்கொள்ள - முடிமே
னிலாவுடையான்றேமா நிழலுடையான்சேர - ✲
னுலாவுடையான்போர்தானுலா. - - ✲

ஏகாம்பரநாதர்தைவீகவுலா

முற்றுப்பெற்றது.

ஆஉ-கண்ணி, ருருகூ.

பிழை திருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்,	
௨,	௨,	தடையு –	தடைய, –	※
௩.	௰௫.	நதி. – –	நதம், –	※
௫.	௧.	கல்பாந்தம். –	கல்ப்பாந்தம். –	※
௫,	௫;	வாரிடம். – –	யாரிடம், –	※
௬.	௰௪.	செய்த –	சென்ற, –	※
௰௭.	௰௩,	நேருக்கி. – –	நெருக்கி, –	※
௰௮.	௰௯,	தயாரீ. –	தாயார்; –	※
௩௫.	௩.	காவின். – –	காவி –	※
௩௬.	௰௪,	நூற்றுயிர நூன்.	நூம்றுயிர நீர்; –	※
௩௭.	௰௮	தேரிய. –	தெரிய, –	※
௩௮.	௭;	கயறு. –	கயிறு; –	※
௩௮.	௰௮	நடைாய –	நடையா; –	※
௪௰.	௮,	உளதாய் –	உளதாய –	※
௫௰.	௰௮	றெனண்ப். –	றென்னப் –	※
௩.	௬,	நாடு. – –	ளுடு; – –	※
௩.	௭;	ரல்விஹுமைம. –	யீம்றிஹுமைம; –	※

இஃது.

(ஸ) புண்ணியகோட்டி நாயகரால்

பதிக்கப்பட்டது.